REGD. No. M. 6311

தனி இதழ் ஒரு அணு
இலங்கையில் 10 சதம்
மலர் 1] [இதழ் 115

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர்..அண்ணதுரை

சந்தா விபரம்
உள்நாடு (இலங்கை உட்பட)
ஆண்டு ரூ. 24—0—0
6 மாதம் ரூ. 12—0—0
3 மாதம் ரூ. 6—0—0
வெளிநாடு:
ஆண்டு ரூ. 30—0—0
6 மாதம் ரூ. 16—0—0
3 மாதம் ரூ. 7—8—0

"THE NAM NADU" A TAMIL DAILY : THE OFFICIAL ORGAN OF : THE D.P.F.

சென்னை : ஐப்பசி 10உ திங்கள் (26—10—53) ☆ ☆ ☆ வெளியூர் : ஐப்பசி 11உ செவ்வாய் (27—10—53)

மேல்நாடு கீழ்நாடு என்று - கலாசாரத்தில் உள்ள இரு பிரிவுகள்!

—— (:) ——

கீழ்நாட்டுக் கலாசாரம் தமிழையும், வட மொழியையும் ஊற்றுக் கால்களாகக் கொண்டுள்ளன

—— (:) ——

வடமேற்குக் கணவாய் வழியாக வந்த வடமொழி கலாசாரத்துக்கான சான்றுகள்

வடமொழி கலாசார ஆதிக்கத்தின் எல்லைக்கோடு விந்திய மலையாகும்

சர். சி. பி. ராமசாமி ஐயர் கூறுமல் கூறுகிறார்

சிதம்பரம், அக். 25—

"கீழ்நாடு—மேல்நாடு என்ற இரு பெரும் கலாசார அருவிகள் உள்ளன. முன்னையது, மிகமிகத் தொன்மையானது; மக்களைத் தம்பால் இழுக்கும் சக்தி நிரம்பப் பெற்றது. இது பெரும்பாலும் வட மொழியையும், தென் மொழியையும் ஊற்றுக் கால்களாகப் பெற்றுள்ளது."

"வடமொழிப் பயிற்சி பெற்றுள்ள ஒருவரால், இந்தியாவில். விந்தியத்திற்கு வடக்கில் வழங்கும் எல்லா மொழிகளையும் அறிந்துகொள்ள முடிகிறது."

"வட மொழியில் பயிற்சி இருந்த காரணத்தால், எனது வாழ்க்கையின் தொடக்கத்திலேயே லத்தின், கிரேக்க மொழிகளைக் குறைந்த அளவு பயிலுவது எனக்குக் கைவல்லியமாயிற்று. பின்னர் பிரேஞ்சு, ஜெர்மனி, ஸ்பானிஷ் முதலிய மொழிகளைக் கற்கக் கருத்தைச் செலுத்தினேன்."

"ஒப்பனையாக உள்ள பல சொற்கள் மேற்குறித்த மொழிகள் அனைத்திலும் பரவிக்கிடப்பதால், அம்மொழிகளில் உள்ள இலக்கியங்களை, சிறிது வட மொழி பயிற்சியைக் கொண்டு கற்று அனுபவிக்க எனக்கு இலகுவாயிற்று"

"மேல் நாட்டுக் கலாச்சாரம், பிரேஞ்சு, ஜெர்மன், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளின் ஆக்கம் கொண்டு மிளிருவதாகும்."

—இவ்வாறு அண்ணாமலை பல்கலைக் கழகத்தின் துணை வேந்தராக இருக்கின்ற சர். சி. பி. இராமசாமி அய்யர் அவர்கள், பல்கலைக் கழகத்தின் பிரெஞ்சு மொழி. இலக்கியப் பகுதியைத் திறந்து வைத்தபொழுது மூன்று நாட்களுக்குமுன் குறிப்பிட்டார்.

★★★★★★★★★★★

அரசியல் 'சாயிபாபா'

"மக்கள், தங்களுடைய குறைகளை எனக்கு எழுதினால், அவைகளை நான் நிச்சயமாகக் கவனிப்பேன்; அது, நான் செய்ய வேண்டிய கடமையாகும். சர்க்காருடன் சண்டை போட்டால்தான், தங்களுடைய குறைகளை நிவர்த்தி செய்து கொள்ள முடியுமென்று எண்ணுவது தவறு."

"மக்கள் என் மீது நம்பிக்கை வைத்தால், ஏழைகளின் நலன்களைப் பாதுகாப்பதற்குத் தேவையான அனைத்தையும் என்னால் செய்ய முடியும்."

—மேட்டூரில் ஆச்சாரியார்
'பாரததேவி': 26—10—53.

★★★★★★★★★★★

★★★★★★★★★★★

முன்கூட்டியே செய்த சதி!

"கிராம வாழ்க்கையோடு, கல்வி, சம்பந்தப்பட்டிருக்க வேண்டும். அத்தகைய சம்பந்தத்திற்கு இப்போது பள்ளிக்கூடம் அடிகோலுகிறது. புது கல்வித் திட்டத்தை எதிர்க்கிறார்கள்: அவர்கள், ஒருவேளை, நிபுணர் கமிட்டி சிபாரிசுகளைக் கூட எதிர்த்தாலும் எதிர்க்கக்கூடும். ஆனால், எதிர்ப்பு பற்றிக் கவலைப்படக் கூடாது."

—"பாரத தேவி"
25—10—53

★★★★★★★★★★★

தோழர் கருணாநிதியின் அபராதத் தொகைக்கு வாரண்ட்?

அபராதம் அல்லது அதற்கேற்ற சொத்துக்களைப் பறிமுதல் செய்ய சர்க்காரின் துடிதுடிப்பு

அரியலூர், அக். 25—

டால்மியாபுரம் பெயர் அகற்றும் போராட்டத்தில் கலந்து கொண்ட காரணத்திற்காக தோழர் கருணாநிதி தலைமையில் சென்ற ஐவருக்கு அரியலூர் நீதிமன்றம் ஐந்துமாத சிறை தண்டனையும், 35 ரூபாய் அபராதமும், கட்டத் தவறினால் ஒரு மாத சிறைத் தண்டனையும், இராம - சுப்பையா தலைமையில் சென்ற 31 தோழர்களுக்கு இரண்டு மாத சிறைத் தண்டனையும், 35 ரூபாய் அபராதமும் கட்டத்தவறினால் ஒரு மாத சிறை தண்டனையும் விதித்து தீர்ப்பளித்திருந்ததை நாம் அறிவோம்.

தோழர்கள் அபராதம் கட்ட மறுத்து, முதல் ஐவரும் 6-மாத தண்டனையும், 31-தோழர்களும் 3 மாத தண்டனையும் ஏற்று சிறை சென்றது நாடு அறிந்ததே.

3 மாத தண்டனை விதிக்கப்பட்ட அந்த 31 தோழர்களும், 15—10—53 தேதியன்று திருச்சி மத்திய சிறையிலிருந்து விடுதலை யடைந்தனர்.

இந்த நிலையில், அபராதம் கட்ட மறுத்து, அதிகமாக ஒரு மாத சிறைத் தண்டனை அனுபவித்த அந்தத் தோழர்களிடமிருந்து அபராதத் தொகையை வசூலிக்க வேண்டி சர்க்கார் ஜப்தி வாரண்ட் பிறப்பித்திருக்கிறது.

அபராதத் தொகையை உடனே கொடுக்கவேண்டும். அல்லது அந்தத் தொகை மதிப்புள்ள சொத்துக்கள் ஜப்தி செய்யப்படும் என்று நாம் அறிகிறோம்.

இந்த நகரிலிருந்து கலந்து கொண்ட 6 தோழர்களின் மீதும் வாரண்ட் பிறப்பித்திருக்கின்றனர். கருணாநிதி முதலிய தலைவர்களுக்கும், மற்றும் ஏனையத் தோழர்களுக்கும், இதே போன்று வாரண்ட் அனுப்பப்பட்டிருக்கிறது.

மேற்படி கொடுமைக்கு ஆளான இக்கழகத் தோழர்கள் அனைவரும் சர்க்காரின் மேற்படிப் போக்கைக் குறித்து மிகவும் வருந்துகின்றனர்.

நம்மைக்குறித்து 'நல்ல அபிப்பிராயம் இல்லை' என்பதை சொல்லித்தான் ஆகவேண்டும்

நமது பிச்சைக்காரர்களைக் கண்டே ஒரியாக்களுக்கு உள்ளம் எரிகிறது!

சென்னை, அக். 26—

"வடநாட்டில், சென்னை மாகாணத்தவர்கள் என்றால், 'நல்ல அபிப்பிராயம்' இல்லையென்பதை நான் சொல்லித்தான் ஆக வேண்டும்."

"தமிழர்கள், வடநாட்டில் பிச்சை யெடுக்கிறார்களே! வடநாட்டவர் யாராவது சென்னைக்கு வந்து பிச்சை யெடுக்கிறார்களா? இதற்கு ராஜாஜி ஏதாவது வழி செய்யக் கூடாதா?"

என்று, ஒரிசா மாகாண பிரதமர், உலகமுழுதும் கால்நடையாகவே சுற்றிப்பார்க்க எண்ணிக் கிளம்பியுள்ள தோழர் இராமன் என்பவரைக் கேட்டிருக்கிறார்.

"நான் கால்நடையாகவே சென்று ஒரிசா பிரதமரைப் பார்த்தேன். அவர் என்னோடு பேசிக்கொண்டிருக்கும் போது, தெருவில் போகும் பிச்சைக்காரர்களைக் காண்பித்து, 'இவர்களெல்லாம் உங்கள் சென்னை மாநிலத்தவர்' என்றார். 'எங்கள் மாநிலத்தவர் யாராவது உங்கள் மாநிலத்தில் பிச்சை யெடுப்பதைப் பார்த்திருக்கிறீர்களா? இவர்களுக்கெல்லாம் உங்கள் ராஜாஜி ஏன் வழி செய்யக் கூடாது?' என்று, என்னைக் கேட்டார்.

—'தினத் தந்தி,' 26-10-53.

பிறப்பினால் ஏற்பட்ட சனாதனத்தை போன்றதல்ல இந்தத் தாழ்வு உயர்வு!

வாய்ப்பளித்தால் நாளையே மாற்றமுறுவது நிச்சயம்

மேட்டூர், அக். 24—

"இந்நாட்டில் அமுலில் உள்ள கல்வித் திட்டம், ஒரு ஜாதிப் பிரிவினையை உண்டாக்கி விட்டது. படிக்காதவர்களைவிட தாங்கள் உயர்ந்தவர்கள் என்று படித்தவர்கள் எண்ணுகிறார்கள். மற்றத் துறைகளில் ஏற்றத் தாழ்வுகளை சமப்படுத்த விருப்பம் ஏற்பட்டிருப்பது போலவே, கல்வித் துறையிலும் பள்ளிக்கூடத்திற்குப் போவதின் மூலம் உயர்ந்த பிரிவைச் சேர வேண்டுமென்று எல்லோரிடமும் எண்ணம் ஏற்பட்டிருக்கிறது. அதனால்தான் பள்ளிக்கூடங்களிலும் கல்லூரிகளிலும் சேர போட்டி போட்டுக் கொண்டு முன்வருகிறார்கள்."

—இவ்வாறு, மேட்டூரில் ஆச்சாரியார் ஜில்லா போர்டு பள்ளிக் கட்டிடத்தைத் திறந்து வைக்கையில் கூறினார்.

ஐவர் சிறையில்!

இன்று

56-வது நாள்

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

26—10—1953 திங்கள்

பலப் பரீட்சை

நான்கு ஆண்டுகளுக்கு முன்பாக, நமது தி. மு. கழகம் துவக்கப்பட்டது. உடன் பிறந்தே கொல்லும் கொள்ளை கொண்டவர் சிலர், நமது கழகத்தின் நெஞ்சுக்கு நேராக ஏசல் அம்புகளை இடைவிடாது எய்தனர். அவைகளை வில்லில் சிரித்து மகிழ்ந்தோம். ஏசல் அம்புகள் நமது பாதத்திலே சரண் புகுந்தன.

நாம் மேற்கொண்ட சிறந்த முறையினால் நாம் வளர்ந்தோம்; குறிப்பிடத் தகுந்த அளவில் ஆக்கம் பெற்றோம். பொதுச் செயலாளர் காட்டிய அந்தப் பாதையின் ஆற்றல் அபாரம், என்பதை துவக்கத்தில் அலட்சியமாகக் கருதியவர் கள்கூட, பின்னர் தயக்கம் காட்டாமல் ஏற்றுக்கொண்டனர். லட்சிய வெற்றியை நோக்கி, இன்று நாம் போட்டுவரும் அணிவகுப்பு, நமது நடைமுறையில் இரண்டறக் கலந்து விட்டது. அந்த 'தாங்கிக் கொள்ளும் நெஞ்சுரத்தில்' பொதிந்து கொண்டு இருக்கும் செயல் திறத்தின் ஆற்றலின் துணைகொண்டும், எவ்வித துறையிலும், எந்தக் களத்திலும், எந்தவித காரணம் காட்டியும், அந்த வெற்றி தரும் நெறியை விட்டு, நாம் நீங்கிச் செல்ல எண்ணுவது கூடாது. அந்த முறையிலும், நிச்சயம், அருமையான மதிக்கத் தகுந்த வெற்றி இருக்கிறது என்பதைக் கண்கூடாகக் கண்ட பிறகு, அதற்கு அரண்செய்யும் அகச்சான்றும், புறச்சான்றும் ஏராளமாக இருக்கும்பொழுது, முறைபற்றி திட்டவட்டமாகக் கூற முடியாத ஐயத்திற்கிடமான பயிற்சி இல்லாத, விரும்பத்தகாத வேறு முறையை எவர்தான் மேற்கொள்ள முயலுவர்?

திராவிட நாடு லட்சிய வெற்றிக்கான நமது கழகத்தின் நடைமுறை, 'தாக்குவர்—தாங்கிக் கொள்ளுங்கள்' என்ற கோட்பாட்டை மூல மந்திரமாகக் கொண்டு இயங்குவது என்ற பேருண்மையை அனைவரும் அறிந்துள்ளனர்; அதனை தாக்கிக் கிடக்கும் காங்கிரஸ் கட்சியினரும் உணர்ந்துள்ளனர்; நமது தி. மு. கழகத்தினரோ நன்கு தெரிந்திருப்பதோடல்லாது, அதே பயிற்சியில் ஆழ்ந்துமுள்ளனர்.

நான்கு ஆண்டுகளில் நமது வளர்ச்சி மகத்தானது. நாட்டிலுள்ள எல்லா அரசியல் கோட்பாட்டினரும் கண்டு அழுக்காறு கொள்ளக் கூடிய அளவில் நாம் வளர்ந்து இருக்கிறோம். நம்மை நமது அரசியலில் தீண்டப்படாதவர்களாகக் கருதக்கூடிய, 'தாழ்வு மனப்பான்மை'யைத் தகர்த்தெறிந்துவிட்டு, முன்வைக்கப்பட்ட பல கருத்துக்களை பொது மக்கள் முன்வைக் கட்டும் பல மன்றங்களின் நிகழ்ச்சிகளில் நமது முன்னணி வீரர்கள் பங்கு கொண்டு, நமது இலட்சியத்தையும், சிறந்த கோட்பாடுகளையும் பரிமாறினர். பலப்பல மன்றங்களிலே திராவிட இன எழுச்சியின் கீதங்கள் நிரம்பியது. இக் கருத்துப் பரிமாற்றத்தில் நமது தி. மு. கழகத்திற்கு முதலிடம் கிடைத்திருக்கிறது. முதல் பரிசும் நமது கழகமே பெற்று இருக்கிறது.

சாதாரண மக்களிடம் மட்டுமே கேட்டுக் கொண்டிருந்த நமது திராவிட நாடு பேச்சு, மாணவர் மன்றங்களிலே, கல்லூரி மேடைகளிலே, பல்கலைக் கழகக்கூடங்களிலே, வேகமாக மோதத் தொடங்கியது. இப்பொழுது, வருங்கால திராவிட நாட்டுப் பெருமக்களாகப் போகும் மாணவமணிகளின் கல்விக்கூடம், திராவிடப் பாசறைகளாக மாற்றமடைந்திருக்கின்றன என்பது, நமது தி. மு. கழகத்தின் பரவலுக்கும் பலத்துக்கும் ஓர் எடுத்துக்காட்டு என்பதோடு மட்டுமல்லாமல், எதிர்காலத்தைச் சித்தரித்துக் காட்டும் ஒளி மயமான எழுச்சி ஓவிய பேருருவம் என்பதை எவரே மறுக்கத் துணிவர்?

நமது தி. மு. கழகத்தின் அங்கவையை நோக்கும்பொழுது, ஒரு பார்வையில் மிதிக்கும் இளம் பருவர்தான் என்றாலும், கண்ணியம், கட்டுப்பாடு, அமைதி என்ற உயர் பண்புகளைக் கடைபிடித்து ஒழுகி ஓம்பி வந்துள்ளது போல, வேறு எந்த அரசியல் கட்சியும் இதுவரை செயலில் காட்டியது கிடையாது என்பது முக்காலும் திண்ணம். பெரும்பலத்தைக் கண்டு, இயல்பாக எழும் கோழையின் பயங்கொள்ளித்தனம் அல்ல இது! பாய்வதற்குப் பதுங்கும் புலியின் போக்குமல்ல!

நமக்கு எதிராகக், கிளம்பும் எதிர்ப்புகள் பல புரியும் வெறிச் செயல்கள் அனைத்தும், அறியாமையின் விளைவு, நம்மை நன்று புரிந்து கொள்ளாததுதான் பலன்; என்று நுணுகி ஆராய்ந்து அறிந்து, நம்மில் மாறுபட்டவரையும், முரண்பட்ட வரையும் நமது அணியில் காண நாம் மேற்கொண்டுள்ள விரதத்தின் விளைவாகும் நமது கழகத்தின் நடைமுறை. நிற்க,

பொதுச் செயலாளரை அறிவு-வழிகாட்டியாகக்கொண்டு, சில செயல் வீரர்களைப் பக்கபலமாகப் பெற்று, சிலரால் துவக்கப்பட்ட நமது தி. மு. கழகம், நான்கு ஆண்டுகளுக்குள், மகத்தானதோர் பலப் பரீட்சையில் ஈடுபட வேண்டிய கட்டாயத்தில் வந்து நின்றது. இந்த பலப் பரீட்சையும்கூட, நாமாக விருப்பத்தோடு மேற்கொண்டது அல்ல; ஆளவந்தார்களின் பிடிவாதப் போக்கு, கழகத்தை அமைதியான அறப் போர்க்களத்துக்கு வலுக்கட்டாயமாகக் கொண்டுவந்து நிறுத்திவிட்டது.

புதிய கல்வித் திட்டத்தை அமுல் நடத்துவதிலிருந்து, காங்கிரஸ் கட்சிக்குள்ளாகவே எதிர்ப்பு அரைகுறையாகக் கருக் கொண்ட நேரத்திலேயே அறவே விட்டொழிக்க ஆச்சாரியார் முன்வந்திருந்தால், நமது தி. மு. கழகமும் வேறு பல முக்கிய வேலைகளில் தனது கருத்தைச் செலுத்தியிருக்கும். அறப் போர்க்களம் என்ற நினைப்பைக்கூட நினைத்திருக்காது.

டால்மியாபுரம் என்ற அடிமைப் பெயரை மாற்ற வேண்டுமென்று, திருச்சி மாவட்டத்தில் உள்ள குடியாட்சி மன்றங்கள் பல தீர்மானித்த பொழுதே, ஆச்சாரியார், கல்லக்குடி என மாற்றுப் பெயர் சூட்ட இணக்கங் காட்டியிருந்தால், பெயர் மாற்றக் கிளர்ச்சியும், நமது கழகத்தின் அமைதியான அறப்போராட்டப் பட்டியலில் இடம்பெற்று இருக்காது.

அடுத்தபடியாக, இந்தியத் துணைக்கண்டத்தின் பிரதமர் பண்டித ஜவகர் அவர்கள 'நான் சென்ஸ்' என்ற இழிச்சொல்லை, வீற்றிருக்கும் பதவியின் பொறுப்புக் கேற்ப 'வருந்துகிறேன்' என்று கூறி வாபஸ் பெற்றிருந்தால் இத்துறையிலும் நமது தி. மு. கழகம் அமைதியான நேரடி நடவடிக்கையில் இறங்கி இருக்காது. இந்த வகையில், திராவிடரின் நெஞ்சப் புண்ணை, நேருவிற்கு நினைவூட்டி, நேருவைத் திருத்தும் பணியினை மேற்கொள்ள வேண்டிய கடமை ஆச்சாரியாருக்கு உண்டு. ஆனால், ஆச்சாரியாரோ, இது விஷயத்திலும் அலட்சியத்தையே அணுகக் கொள்ளும் தவறினை மனமாறச் செய்தார்.

எனவே, தி. மு. கழகம், வெற்றியா, தோல்வியா இறுதி என்னும் இலாப-நஷ்டக் கணக்கை அரசியலில் பார்க்கக் கூடாது என்ற அறிவுரைக்கிணங்க, மூன்று முனை அறப் போர்க்களத்திற்கு அணிவகுத்துச் சென்றது.

ஆறு உயிர்களையும், பலரின் உடல் உறுப்புக்களையும் ஆச்சாரியாரின் அடக்குமுறை வெறிக்குக் காணிக்கையாகக் கொடுத்துள்ளது.

5,000-க்குக் குறையாத கழகத் தோழர்களைச் சிறையிலடைத்து; கிட்டத்தட்ட 3,000 தோழர்கள்மீது வழக்குத் தொடுத்து, தண்டித்து சிறைக்குள் தள்ளியது, ஆச்சாரியார் சர்க்கார்.

பொதுச் செயலாளரையும், மற்றும் பல முன்னணி வீரர்களையும் சிறைக்குள்ளே வைத்திருக்கிறது, காங்கிரஸ் ஆட்சியாளர் குழு!

ஆச்சாரியாரின் நினைப்பு, அடக்குமுறையைக் கடுமையாக்கிவிட்டால், அதன் விளைவாக ஏற்படும் அச்சம், திராவிட மக்கள், கழகத்தின்பால் வைத்துள்ள பாசத்தையும், பற்றையும் அறுத்துக்கொள்ளுவர் என்ற அறியாமையின் அடியாக எழுந்ததாகும்.

ஆங்கிலேயர் ஏவிய அடக்குமுறையால் ஆங்கிலேயர் அழிந்ததையும், அடக்குமுறை நோக்கத்திற்கு மாறாக தாம் பெற்ற அந்தஸ்தையும், அரசியல் செல்வாக்கையும் ஆச்சாரியாரால் இத்தருணத்தில் சிந்தித்துப்பார்க்க முடியாமல் போய்விட்டது. அவர் வீற்றிருக்கும் அதிகார பீடத்தின் பண்போ இது, அல்லது அவரின் முதிர்ந்த வயதின் கோளாறோ இது நாம் அறியோம்! எப்படியோ ஆச்சாரியார், ஒன்றன்பின் ஒன்றாகத் தவறு செய்வதிலேயே கருத்தைச் செலுத்திக்கொண்டு இருக்கிறார். மேலும் அதே போக்கில் தான் அவர் இருப்பார் என்பதும், அவர் ஆங்காங்கே பேசுகின்ற பேச்சில இருந்தும் விளக்கமாகிறது.

ஆச்சாரியார் எதையும் மறந்ததாகவும் தெரியவில்லை; மாற்றிக்கொண்டதாகவும் தெரியவில்லை. மேலும் மேலும் எதிர்க் கட்சிகளின் பலத்தைச் சோதிப்பதிலேயே பேராசை கொண்டிருப்பவராகக் காட்டிக்கொண்டு வருகிறார். நிற்க.

நமது தி. மு. கழகமும், ஆச்சாரியார் நினைத்தபடி, அவருடைய அடக்குமுறை வேகத்தினால், நாம் பட்டுவிடவும் இல்லை; கொண்ட கொள்கையிலிருந்து வழுக்கி விழுந்துவிடவும் இல்லை. இவ்வளவு அரும்பெரும் தியாகங்களுக்குப் பிறகும், நமது கழகம் முன்பிருந்ததைக் காட்டிலும் பலம் பெற்று, புகழ் ஒளியைப் பரப்பிக் கொண்டு, கம்பீரமாகத் தோற்றமளித்துக் கொண்டுதான் இருக்கிறது என்பதை ஆச்சாரியார் சிந்திக்கவேண்டும். அவரைவிட நமது கழகத் தோழர்கள் இது விஷயத்தில் அதிக அக்கரை காட்டி ஆராய்ந்து பார்க்க வேண்டும். நமது கழக பலப் பரீட்சையின் முதற் கட்டம் முடிந்துவிட்டது. இனி இரண்டாம் கட்டம் தொடங்குகிறது.

இந்தக் கட்டத்தில், நாம் முன் காட்டிய நெஞ்சுரத்தைக் காட்டிலும் அதிகமாகக் காட்டியாக வேண்டும். முன்னர் கொண்டிருந்தக் கொள்கைப் பற்றைவிட மேலும் பதின்மடங்கு கொள்கை பற்றுக் கொள்ளவேண்டும். முன்பிருந்த குடும்ப பாசத்தைப்போல நூறு மடங்கு குடும்பப் பாசத்தை பெருக்கிக்கொள்ள நமது தி. மு. கழகத் தோழர்கள் தங்களை தயாரித்துக்கொள்ள வேண்டும். முதல்படியில், கண்ணியம், கட்டுப்பாடு, அமைதி ஆகிய மூன்று சிறந்த பண்பாடுகள் நமது நடைமுறையில் இருக்கப் பார்த்துக் கொண்டதற்குக் கூடுதலாக, இந்த இரண்டாங் கட்டத்திலும் கொண்டு ஒழுக வேண்டும். அப்பொழுதுதான், இந்த இரண்டாங் கட்டத்திலும், ஆச்சாரியார் தோற்றுப் புறமுதுகிடவும், காங்கிரஸ் கனபதிகள் வெட்கித் தலைகுனியவும், நமது தி. மு. கழகத் தோழர்களால் வெற்றிகரமாகச் செய்ய முடியும். அந்த இரண்டாம் கட்டத்தைக் குறித்து நாளை விரிவாக எழுதுவோம்.

கல்கத்தா பாரதி பென்சில் தொழிற்சாலை

தொழிலாளர் வசமாயிற்று

கல்கத்தா, அக். 24—

இங்குள்ள பாரதி பென்சில் தொழிற்சாலையை பொதுவுடமைத் தொழிற் சங்கத்தைச் சேர்ந்த 140 தொழிலாளர்கள் கைப்பற்றியுள்ளனர். தொழிலாளர்கள் உள்ளிருந்துகொண்டே வேலை செய்யாது அறப்போர் புரிந்தனர். இதனால் மில் மானேஜர் தொழிற்சாலையை மூடிவிட்டார், தொழிலாளர்கள் இதனால் சுவர் ஏறி உட்புகுந்து வேலை செய்து வருகிறார்களாம்.

இதுவரை முதலாளிகள் சார்பில் போலீசார் யாரும் வந்து விசாரிக்கப்படவில்லை.

இலங்கையில் தி. மு. கழகப் பொதுக் கூட்டம்

அண்மையில், இலங்கை—நுவரெலியா மாவட்ட தி. மு. கழகப் பொதுக்கூட்டம், ரேஸ் கோர்ஸ் டவுன் ஹாலில் நடைபெற்றது. கூட்டத்திற்கு தோழர் நாதன் தலைமை வகித்தார். தோழர் டி. எம். பீர்முகமது விளக்கவுரையாற்றுகையில், கழக லட்சியப் பாதையில் பொறுப்புடனும், பொறுமையுடனும் முன்னேறிச் செல்ல வேண்டுமென்று கழகத் தோழர்களைக் கேட்டுக் கொண்டும், மற்றும் பல பொருள்கள் குறித்தும் நீண்டதோர் சொற்பொழிவாற்றினார்.

கூட்டத்தில், ஏராளமான மக்கள் குழுமியிருந்தனர். தோழர்கள் இளஞ்செழியன், ராமசாமி, அப்பு, கனவேலு ஆகியோரும் சொற்பொழிவாற்றினர்.

சமயநல்லூரில் தி. மு. கழகப் பொதுக் கூட்டம்

19—10—53-ல், தி. மு. கழக சார்பில், தோழர் எ. கே. சிவசாமி தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், தோழர்கள் வசனப் பித்தன், எம். ஆர். கணேசன், எஸ். முத்து, சி. பி. சிற்றரசு ஆகியோர் பேசினார்கள்.

சமயநல்லூரில் உள்ள கிளை அஞ்சலகத்தை, சகல வசதிகளும் உள்ள தபால்—தந்தி நிலையமாக்க அரசியலாரைக் கேட்டுக் கொண்டும், அதிக மக்கள் தொகை (சுமார் 4000 மக்கள்; 1600 வாக்காளர்கள்) உள்ளதாகிய சமயநல்லூரில், இது நாள் வரை பஞ்சாயத்து போர்டு ஏற்படுத்தவில்லையென்பதை மாவட்ட பஞ்சாயத்து போர்டு அதிகாரியும், கலெக்டரும் கவனித்து ஆவன செய்யும்படி கேட்டுக்கொண்டும், மற்றும் பல முக்கிய தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

அறப்போர் வீரர்களுக்கு பாராட்டு

செயங்கொண்டம், அக். 22—

கல்லக்குடி போராட்டத்திலும், ரயில் நிறுத்தப் போராட்டத்திலும் சிறை சென்று விடுதலையடைந்த இவ்வூர் 14 தி. மு. கழகத் தொண்டர்களைப் பாராட்டி, 19—10—53-ல், கார்த்தி திடலில், சிறப்புற பாராட்டு விழா நடைபெற்றது. தோழர் சு இளங்கோ வரவேற்பு சொற்பொழிவாற்றினார். தலைவர் தம் முன்னுரைக்குப் பிறகு சிறை சென்ற தோழர்களான ஆ இராமசாமி, எம். வேணுகோபால், பி. இ. கண்ணப்பா ஆகியோர் பேசினர்.

பம்பாய் தெ. இ. ஆதி திராவிட மகாஜன சங்கம்

பம்பாய், அக். 25—

சங்க நிர்வாகக் கழக உறுப்பினர்களின் கூட்டம் 21-10-53 தேதி தாராவியில் நடைபெற்றது. தோழர் ஓ. ச. அய்யாசாமி அவர்கள் தலைமை வகித்தார். தோழர் கி.ச. மாடசாமி அவர்களை துணைத் தலைவர் பதவியிலிருந்து விலக்கிவிடுவதென தீர்மானிக்கப்பட்டது.

தலைமை நிலையம் தரும் செய்தி

★

தூத்துக்குடி வழக்கு—ஏற்பாடுகள்

★

ஆறு வக்கீல்கள் வாதாடுவர்

சென்னை, அக். 23—

தூத்துக்குடி வழக்கு சம்பந்தமாக தி. மு. கழகத் தலைமை நிலையப் பொறுப்பாளர் ஏ. கோவிந்தசாமி, எம், எல் ஏ அவர்கள் 13—10—53 இரவு வழக்கறிஞர்கள் கே. நாராயணசாமி பி.ஏ., பி.எல்., இரெ. இளம் வழுதி எம்.ஏ., பி.எல். ஆகியோருடன் தூத்துக்குடிக்கு சென்றார்.

தூத்துக்குடி வழக்கில் சம்பந்தப்படுத்தப்பட்ட தோழர்களை, அவர்கள் சந்தித்து. வழக்கு சம்பந்தமாக உரையாடினர். பிறகு, கழக நிலைமைகள் குறித்து, கழக அலுவலர்களிடம் தோழர் கோவிந்தசாமி ஆலோசனைகள் செய்தார். தூத்துக்குடி வழக்கறிஞர் பி. எஸ் கந்தையா பிள்ளை அவர்களை வழக்கு சம்பந்தமாக கவனிக்கும்படி கேட்டுக் கொண்டனர். அவரும் இசைவு தந்துள்ளார்.

பிறகு, மூவரும், கார் மூலம் திருநெல்வேலி சென்றார்கள். அங்கே நெல்லை மாவட்டச் செயலாளர் தோழர் வீரபாகுவையும், தூத்துக்குடிதோழர் தாலமுத்துவையும் அழைத்துக் கொண்டு நெல்லை வழக்கறிஞர் எம். நெல்லையா பிள்ளை அவர்களை வழக்கு விஷயமாக, கவனிக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டதற்கு அவர் இசைந்துள்ளார். பிறகு, பாளையங்கோட்டை சென்று, அங்குள்ள வழக்கறிஞர்கள் பி. ஏ. தங்கசாமி நாடார், கந்தையா நாடார், சுப்ரமணியப் பிள்ளை ஆகியோரையும் சந்தித்து, தூத்துக்குடி வழக்கு சம்பந்தமாக ஆஜராகும்படி கேட்டுக் கொள்ளப்பட்டனர். அவர்களும் இசைந்துள்ளார்கள். தோழர் இரெ. இளம் வழுதி எம. ஏ., பி. எல்., வழக்கு நடைபெறும் வரை, தூத்துக்குடியிலிருந்து வழக்கு சம்பந்தமான முழுப் பொறுப்பேற்று, பணியாற்ற முன்வந்துள்ளார்.

* * *

அத்துடன் பாளையங்கோட்டையில் சிறை வைக்கப்பட்டு தற்சமயம் ஆஸ்பத்திரியில் நோய்வாய்ப்பட்டிருக்கும் கே. வி கே. சாமியை சந்தித்தனர். அவர், தம் உடல்நிலை குன்றியே தென்படுகிறார்.

அங்கிருந்து 15-ந் தேதி இரவு மதுரை சென்று, காங்கிரஸ் ஆத்திரக்காரர்களால் தாக்குண்டு, பலத்த காயங்களோடிருக்கும் தி. மு. கழகத் தோழர் கிருஷ்ணசாமியைச் சந்தித்தனர். அவர் தாக்கப்பட்டுக் கிடக்கும் நிலை பரிதாபமாயிருந்தது. மதுரையில் நடைபெற்ற நிகழ்ச்சிகளை, தேசிய ஏடுகளும் பிறரும், திரித்துக் கூறுவது பற்றி விசாரித்ததில், அத்தனையும் வேண்டுமென்றே சிருஷ்டிக்கப்படும் குற்றச் சாட்டுகள் என்று தெரியவந்தது. என்றும்போல், நமது தோழர்கள் கண்ணியத்தோடும், கட்டுப்பாட்டோடும் இருந்து வருகிறார்கள்.

தி. மு. கழகத்தின் ஏற்பாடுகள்

★

பொறுப்பாளர் சுற்றுப் பயணம்

மதுரையில் நடைபெற்ற கலவரங்களுக்கு, தி. மு. க. வினர் பொறுப்பாளியல்லர் என்ற விவரமும், முடைத்தது. காங்கிரஸ் ஆத்திரக்காரர்கள், வேண்டுமென்றே, முன்னேற்பாடான முறையில் நம் தோழர்களைத் தாக்கும் முயற்சிகளைச் செய்துவந்த விவரங்களும் கூறப்பட்டன.

மேற்படி கலவரங்களில் தாக்குண்டும், நந்து தோழர்கள் பொதுச்செயலாளர் அடிக்கடி கூறியதான, "தாக்கினால் தாங்கிக்கொள்வோம். அமைதியும், அன்பு மார்க்கமுமே, நம் வழி" எனும் அறிவுரையின்படியே நடந்து வருவது மகிழ்ச்சிக்குரிய சேதியாகும்.

ஆச்சாரியார் கல்வித் திட்டத்துக்கு ஆந்திராவில் அடிமேல் அடி!

உடனடியாகத் தொலைக்க வேண்டும் என்று இரு ஆந்திர மாணவர் மன்றத்தின் முறையீடு

இந்தூர், அக். 23—

"புதிய கல்வித் திட்டத்தை உடனடியாகத் தொலைத்துக் கட்ட வேண்டும்"

இவ்வாறு, ஆந்திர ஜனநாயக மாணவ மன்றமும், 'விசால ஆந்திர வித்யார்தி மகா சபையும் ஆந்திர மாநில சர்க்கார் துணைப் பிரதமர் சஞ்சிவி ரெட்டியார் அவர்களிடம் கொடுத்த கோரிக்கை மனுக்களில் குறிப்பிட்டிருக்கின்றன.

பெண்ணார்—குமுதவதி பெருவாய்க்காலில் ஏற்பட்டுவிட்ட உடைப்புகளைப் பார்வை இடுவதற்காக ஆந்திர மாநில துணைப் பிரதமர், நேற்று இங்கு வந்தார்.

அப்பொழுது பல சங்கங்களின் சார்பில், அவரிடம் எழுத்து மூலம், தேவைகளைத் தெரிவிக்கப்பட்டன.

இப்போதுள்ள உஸ்மானியா பல்கலைக் கழகத்தை இந்தி பல்கலைக் கழகமாக மாற்ற எண்ணியுள்ள முயற்சியைக் கைவிட தமது செல்வாக்கைப் பயன்படுத்தவேண்டுமென்றும், அத்தகைய மாற்றத்தின் விளைவாக, பொதுவாக ஆந்திரர்களுக்கும் குறிப்பாக ஒரிசாவிலும், மைசூரிலும் உள்ள ஆந்திரர்களின் நலன்கள் பாதிக்கப்படும் என்றும், இரு மாணவர் மன்றங்களின் மனுக்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளன.

ராயலசீமைக்கு ஒரு தனி பல்கலைக் கழகம் நிறுவ வேண்டும் என்றும், ராயலசீமையின் முன்னேற்றத்திற்கென்றே துவக்கப்பட்டு நடைபெற்று வரும் பெல்லாரியில் உள்ள தொழிற் கல்லூரியை காகிநாடாவிற்கு மாற்ற முயற்சி செய்யப்படுவதைத் தடுத்து இந்தூருக்கு மாற்ற முயற்சிக்க வேண்டும் என்றும், கோரிக்கைகள் தரப்பட்டுள்ளன.

அங்குள்ள நாதப் பிராமணர்கள், அதாவது. க்ஷவரத் தொழிலாளர்கள் தங்களுக்கு நிலப்பட்டா செய்ய வேண்டுமென்றும் மந்திரியிடம் கோரிக்கை ஒன்று கொடுத்துள்ளனர்.

புதிய கல்வித் திட்ட நிபுணர் குழுவின் அறிக்கை

சென்னை சர்க்காரின் புதிய ஆரம்பக் கல்வித் திட்டம் சம்பந்தமாக விசாரிக்க நியமிக்கப்பட்டுள்ள பாருளேகர் கமிட்டியின் அறிக்கை நாளை மாலைக்குள் தயாராகிவிடுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. அறிக்கையைப் பூர்த்தி செய்து ஆர். வி. பாருளேகர் நவம்பர் 1-ந் தேதி சர்க்காரிடம் சமர்ப்பிப்பார்.

கமிட்டியின் இறுதிக் கூட்டத்தில் பேராசிரியர் பாருளேகர், டாக்டர் பி. பி. டே, செயலாளர் எஸ். கோவிந்தராஜலு ஆகியோர் கலந்து கொண்டனர்.

எத்தகைய சிபாரிசுகள் செய்ய வேண்டுமென்பதை கமிட்டி இரகசியமாகவே வைத்திருக்கிறது எனச் சொல்லப்படுகிறது.

****

சிறையிலே, தூத்துக்குடி தோழர்கள்!

★ அன்பு மனைவியரைப் பிரிந்து, ஆசைக் குழந்தைகளை மறந்து சிறைக்குள்ளே வதிகிறார்கள்!

★ கள்ளர்களைப்போல 'கைகளிலே விலங்கு!' — காலவரம்பில்லா 'காராக்கிருக வாழ்வு!'—கம்பிகளுக்குப் பின்னால் குமுறுகின்றனர் தோழர்கள் !!!

★ நெஞ்சு நெகிழ்கிறது நமக்கு! நீடிக்கிறது இந்நிலை அவர்களுக்கு !!

★ மானங்காத்த அந்த மறக்குல மைந்தர்கள் மீண்டும் நம்முடன் உலவ, உங்களுடைய ஒத்துழைப்பும், உதவியும் உடனடியாகத் தேவை.

தூத்துக்குடி சதி வழக்கு நிதிக்கு உங்கள் 'காணிக்கை' எவ்வளவு?

நிதி மிகுந்தவர் பொற்குவை அளித்து, பணம் குறைந்தவர் காசுகள் தந்து, சதி வழக்கு நிதியைப் பெருகிடச் செய்வீர்

★

உங்கள் நினைவிலிருக்கட்டும் :

தூத்துக்குடி தோழர்கள் மீது 96 குற்றச்சாட்டுகள் 16 சட்டப் பிரிவுகள் சுமத்தப்பட்டிருக்கின்றன

****

எதிர்பார்த்ததுதானே! இதில் என்ன ஆச்சரியம்?

ஆச்சாரியாரை தோத்தரிக்கும் அமைச்சர் பக்தை!

குடந்தை, அக். 25—

கும்பகோணம் நகர சபை பெண் உறுப்பினர் தோழியர் சகுந்தலா கிருஷ்ணமூர்த்திக்கு, சென்னை மந்திரி ஜோதி அம்மாள் எழுதியுள்ள ஒரு கடிதத்தில் குறிப்பிட்டிருப்பதாவது :-

"ஞானச் சுடராக விளங்கும் ராஜகோபாலாச்சாரியாரின் மந்திரி சபையில், எனக்கு, பதவி கிடைத்ததில் நான் பெருமைப்படுகிறேன்."

"என்னிடம் நல்லெண்ணம் கொண்டவர்கள், என்மீது வைத்துள்ள நம்பிக்கைக்குத் தகுந்தபடி; நான், பொறுப்போடும், உறுதியுடனும் என் கடமையை நிறைவேற்றுவேன்" என்று தெரிவித்துள்ளார்.

தில்லை தி. மா. மு. கழகம்

20-10-53ல், கழக இரண்டாவது ஆண்டு துவக்க விழா நடைபெற்றது. தோழர்கள் க. வீரப்பன் செயலாளராகவும், கோ. இராமு, கோ. ஆதிசேடன் துணைச் செயலாளர்களாகவும். இரா. இராசகோபாலன் பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

கயானாவில் அறுவர் கைது

ஜார்ஜ் டவுன், அக். 25—

பிரிட்டிஷ் கயானாவில் மக்கள் முன்னேற்றக் கட்சியின் ஆறு முக்கிய தலைவர்கள் நேற்று இரவு நெருக்கடி காலச் சட்டப்படி கைது செய்யப்பட்டனர்.

ஜார்ஜ் டவுனுக்கு நான்கு மைல் தொலைவிலுள்ள நியூ ஆம்ஸ்டர்டாம் என்ற நகரில் அவர்கள் காவலில் வைக்கப்பட்டிருக்கின்றனர்.

சி. ஆர்.-ஐ அரசியல் அமங்கலியாக்க அனுமார் வால் நீளுகிறது

முதியவர் முகத்திற்கு நேராக காமராஜர் முஷ்டியை நீட்டுகிறார்!

இந்த முறை எவர் அபயம் அளிக்க முன் வருவரோ?

சென்னை, அக். 25—

ஆச்சாரியாரை முதல் மந்திரி பதவியிலிருந்து நீகுவதற்கு காமராசரின் குழுவினர் தொடர்ந்து முயற்சி செய்வதாக நம்பிக்கையான செய்திகள் பரவி வருகின்றன;

சட்டசபை காங்கிரஸ் கட்சியை உடனடியாகக் கூட்டி, புதிய தலைவரைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று கோரும் மனு ஒன்றை காமராசரின் குழுவினர் தயாரித்து வருகிறார்களாம். இது வரை இத்தமனுவில் 40காங்கிரஸ் எம். எல். ஏ.க்கள் கையெழுத்துப் போட்டிருப்பதாக காமராசரின் குழுவினர் கூறிக்கொள்கிறார்கள்.

முன்பொரு முறை, காமராசர் குழுவினர், ஆச்சாரியாரை நீக்க எடுத்துக்கொண்ட முயற்சி கடைசி நேரத்தில் கைவிடப்பட்டதும், அதுபற்றி நேருவுக்கு ஆச்சாரியார் கடிதம் எழுதியதும் அனைவருக்கும் நினைவிருக்கும். நேருவிடமிருந்து "இப்போது கட்சிக் கூட்டத்தைக் கூட்ட வேண்டிய அவசியமில்லை" என கடிதம் வந்த பின்பு தான், காமராசர் குழுவினர் ஆச்சாரியாருக்கு அபயமளித்தனர்.

இப்போதைய கையெழுத்து சேர்க்கும் பணியில் பாகனேரி ஆர். வி. சாமிநாதன், டி. வி. கிருஷ்ணமூர்த்தி, கே.டி.கோசல்ராம் முதலிய காங்கிரஸ் எம். எல். ஏ.-க்கள் தீவிரமாக ஈடுபட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

காமராசரைக் கலந்தாலோசிக்காமலே மூன்று மந்திரிகளைப் புதிதாக ஆச்சாரியார் நியமித்தது, காமராசரின் குழுவினருக்கு ஏற்கனவே இருந்த எரிச்சலை கிளப்பிவிட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

ஜப்பான் — பாகிஸ்தானுக்கிடையே நடைபெற்ற வர்த்தகத்தில், ஜப்பான், பாகிஸ்தானுக்கு 140 லட்சம் பவுன் கொடுக்க வேண்டியிருக்கிறது. ஜப்பானிலிருந்து 50 லட்சம் பவுன் பெறுமான [illegible] வாங்க பாகிஸ்தான் [illegible]

மகாஜன சபை, மக்கள் மன்றமாக மாற வேண்டும்

"கண்டிக்கும் நாடகங்களைவிட, பொருளுடைய கிண்டல் நாடகங்களே நடிக்கப்படுதல் நல்லது"

—காஞ்சி-கல்யாணசுந்தரன்

பாரதி நாடக மன்றத் திறப்பு விழாவில் பேச்சு

சென்னை, அக். 25—

இன்று மாலை 5-30 மணிக்கு, சென்னை மகாஜன சபையில் பாரதி நாடக மன்றம் துவக்க விழா நடைபெற்றது. அவ்வமயம் மன்றத்தின் சார்பில் தோழர் என். ஜீவானந்தம் எல்லோரையும் வரவேற்றார்.

தோழர் பி பாலசுப்பிரமணியம் ('சண்டே அப்சர்வர்') மன்றத்தைத் துவக்கிவைத்தார். அவர் மன்ற நடிகர்கள் கண்ணியமும், கட்டுப்பாடும் நடந்து கொள்ள வேண்டும் என்றார்.

தலைமை வகித்த தோழர் கோகுல கிருட்டினன், பாரதியின் புரட்சிக் கருத்துக்களையும், தி. மு. கழகத்தின் கருத்துக்களையும் ஒப்பிட்டுப் பேசினார்.

தோழர் டி. சடகோபன் பாரதி படத்தைத் திறந்துவைத்துப் பேசினார்.

அடுத்து, சினிமா நடிகர் தோழர் எஸ்.எஸ். ராசேந்திரன், பாரதியார் ஒரு திராவிடர்; தவறுதலாகப் பார்ப்பனராகப் பிறந்துவிட்டார் என்றும், அவர் பெயரால் நடத்தும் இம்மன்றம், புரட்சிக் கருத்துக்களை நாட்டிற்கு நல்கவேண்டும் என்றார்.

பின்னர், நடிகமணி தோழர் டி. வி. நாராயணசாமி பேசுகையில் ஜாதி ஒழிய பேச்சு மட்டுமின்றி, கலப்பு மணங்கள் செய்தல் வேண்டும் என்று கூறினார்.

தோழர் வி. பி. எஸ். மணியர் பேசுகையில், சீர்திருத்தமும், சிந்திக்கும் அறிவும், புத்தர் காலத்தில் தான் வித்திடப்பட்டது என்று மேற்கோளுடன் பேசினார்.

அதன் பிறகு, தோழர் காஞ்சி-கல்யாணசுந்தரம், எதிர்கால நாடகசம்பந்தமாக சிலதேவைப்படும் கருத்துக்களை சுவாசம் ததும்ப எடுத்து விளக்கினார். என். எஸ். கிருஷ்ணன் சினிமா உலகில் செய்த பயனுடையக் கிண்டலை நாடக உலகிலும் பின்பற்ற வேண்டும் என்று கூறினார்.

புதுமை மணம் வீசச் செய்ய மகாஜன சபை தொடக்கத்தைக் குறிப்பிட்டுவிட்டு, அது விரைவில் சென்னை வாழ் திராவிட மகாஜனங்களின் சபையாக மாறுமென்பதற்கு, இன்றைய கூட்ட நிகழ்ச்சி ஓர் முன்னறிவிப்பு என்று தனது பேச்சில் குறிப்பிட்டார்.

கடைசியாக புலவர் தணிகை உலகநாதன், பழமையோடு புதுமையும் வேண்டும் என்றும், தனது நாடக அனுபவங்களையும் மிக அழகாகப் பேசினார்.

மன்றத்தின் அமைச்சர் தோழர் வி. முருகநாதன் நன்றி கூற கூட்டம் முடிவுற்றது.

டிராம்வே பிரச்னை

தூதுக்குழு—மந்திரி சந்திப்பு

சென்னை, அக். 24—

நகர தொழிற்சங்கக் கௌன்சில் சார்பில், தூதுக் குழு ஒன்று, நேற்று தொழில் மந்திரி யூ. கிருஷ்ணாராவைச் சந்தித்து, டிராம் சர்வீசை மீண்டும் நடத்துவதற்கான திட்டங்கள் அடங்கிய விண்ணப்பம் ஒன்றைத் தந்தது.

இதனை ஆச்சாரியாரிடம் அறிவிப்பதாக மந்திரி யூ. கிருஷ்ணாராவ் தெரிவித்ததாகக் கூறப்படுகிறது. டிராம் சர்வீசை எடுத்து நடத்தத் தயாராக இருக்கும் எந்த ஸ்தாபனத்துக்கும் ரூ. 9 லட்சம் கடன் உதவி அளிக்கத் தயாராக இருப்பதாகவும், அப்படி யாரும் நடத்த முன்வராவிடில் தாங்களே சர்வீசை எடுத்து நடத்தத் தயாரென்றும் மந்திரியை சந்தித்த தூதுக்குழுவினர் அறிவித்தனராம்.

தொழிலாளர்கள் கடன் தருவதாக இருக்கும் பணம், 'பிராவிடெண்ட் நிதி'யிலிருந்து தரப்படுமாம்.

ஆச்சாரியார் சுற்றுப் பயணத்தில் இருப்பதால், அவர் வந்த பின்னர் பதில் தெரிவிப்பதாக மந்திரி கிருஷ்ணாராவ் கூறினார்.

எண்ணெய் தொழிலாளர் வேலை நிறுத்தம்

நெருக்கடியைத் தவிர்க்க லண்டன் நகரில் ராணுவ பிரவேசம்

லண்டன், அக். 23—

லண்டன் நகரில் பெட்ரோல் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்து வருகிறார்கள். அது மேலும் பல பகுதிகளுக்குப் பரவாமல் இருப்பதற்காக சர்ச்சில் சர்க்கார் எச்சரிக்கை நடவடிக்கையில் ஈடுபட்டு இருக்கிறது. ராணுவத்தை லண்டன் நகருக்குக் கொண்டுவந்து இருக்கிறது.

வேலை நிறுத்தம் செய்துள்ள தொழிலாளர்களின் தலைவர்கள், வேலைக்குத் திரும்ப வேண்டும் என்று வற்புறுத்திய போக்குவரத்து தொழிற் சங்கத் தலைவர்களுடன் இன்று கலந்துபேச இருக்கிறார்கள்.

இந்தப் பேச்சின் முடிவு, மேலும் பலரின் வேலை நிறுத்தத்தில் முடிந்து விடுமோ என்ற அச்சத்தின் காரணமாகவே இந்த இராணுவ நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டு இருப்பதாகத் தெரிய வருகிறது.

ராணிப்பேட்டைக்கு ஆச்சாரியார் துப்பறியும் நாய்கள் தேவை!

இராணிப்பேட்டை, அக். 22-

இராணிப்பேட்டை வட்டாரத்தில் தொடர்ந்து பல ஆண்டுகளாகக் குறிப்பிட்ட சில மாதங்களில் (செப், அக். நவ.) பலவித மான திருட்டுகள் நடந்து கொண்டே இருக்கின்றன. இந்த மாதத்திலும் பல சம்பவங்கள் நடந்திருக்கின்றன. இங்கு போதிய போலீஸ் இல்லாததால் திருடுகளைத் தடுக்கவும் முடியவில்லை; களவுகளைக் கண்டுபிடிக்கவும் சாத்தியமில்லை. எனவே, சென்னை துப்பறியும் நாய்களை அனுப்பி உதவுமாறு பத்திரிகை சங்கத்தார் சென்னை சர்க்காரைக் கேட்டுள்ளனர்.

தி. மு. கழகங்கள் துவக்கம்

விருத்தாசலம் வட்டத்தில், 10—10—53-ல், கருவப்பிலங்குறிச்சியிலும், 11—10—53-ல் முருகன்குடியிலும், 12-10-53-ல் கார்குடலிலும், தி. மு. கழகத் துவக்க விழாக்கள் நடைபெற்றன. தோழர்கள் ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ., தோழியர் பூங்கோதை, பொன்னம்பலனார், சி. முனுசாமி, என் ...மலை ஆகியோர் விழாவில் கலந்துகொண்டார்கள். ஆச்சாரியார் கல்வித் திட்டத்தையும், காங்கிரஸ்காரர்களின் காலித்தனத்தையும் கண்டித்துப் பேசினார்கள்.

16—10—53-ல், கூடலூரில், தி. மு. கழகம் துவக்கப்பட்டது. தோழியர்கள் அருண்மொழி பி. ஓ. எல்., பூங்கோதை ஆகியோர் பேசினர்.

---

o-o-o-o-o-o-o-o-o-o-o-o

கல்லக்குடி அறப்போர்

★

இன்று

106-வது நாள்

★

கல்லக்குடி அறப்போர் தலைவர் மு. கருணாநிதி, மற்றும் பல தோழர்கள் சிறையில்

★

இன்று

105-வது நாள்

o-o-o-o-o-o-o-o-o-o-o-o

திருவாங்கூர்-கொச்சி பொதுத் தேர்தலில் போட்டியிட பிரஜா-சோஷலிஸ்டு கட்சியும், ஐக்கிய முன்னணியும் ஒரு ஒப்பந்தம் செய்து கொள்ளுமென்று நம்புவதற்கில்லை என்று பிரஜா-சோ. கட்சி பொதுக் காரியதரிசி கூறியுள்ளார்.

மான்யங்களைக் குறைத்துக் கொள்ள 'மகாராஜாக்களுக்கு' மனமில்லை!

காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த நால்வரும்கூட மௌனம் சாதிக்கின்றனர்!

கட்டாக், அக். 24—

ஒரிசாவில், ஆண்டொன்றுக்கு ரூ 3 லட்சம் 'ராஜ மான்யம்' (ப்ரீவி பர்ஸ்) பெறும் எந்த முன்னாள் மகாராஜாக்களும், தாங்களாகவே, 'அம்மான்யத்தில் ஒரு தொகையைக் குறைத்துக் கொள்ள வேண்டும்'; என்கிற பிரதம மந்திரி நேருவின் கோரிக்கைக்கு இணங்கவில்லை.

இந்த முன்னாள் மகாராஜாக்களைப் பெரும்பாலும் கொண்டதும், ஒரிசாவில், இரண்டாவது பெரிய கட்சியுமான 'கனதந்திர பரிஷத்'தின் பிரதிநிதி யொருவர் கூறுகையில், அடுத்த மூன்று ஆண்டுகளில், 'ராஜமான்யங்கள்' அடியோடு நிறுத்தப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுவதால், நேருவின் வேண்டுகோளுக்கும் யாரும் இணங்க முன்வரவில்லை," என்று கூறினார்.

காங்கிரஸ் கட்சியிலுள்ள முன்னாள் மகாராஜாக்களும் யாரும் முன்வரவில்லை; அவர்கள் மௌனம் சாதிக்கிறார்கள்.

ஒரிசாவின் முன்னாள் மகாராஜாக்கள் 24 பேர்; இவர்களில் 4 பேர், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள்.

மந்திரிக்கு 15 ஆண்டு சிறை!

கெய்ரோ, அக். 26—

வப்து கட்சியைச் சேர்ந்த முன்னாள் மந்திரி சுலைமானுக்கு எகிப்திய புரட்சி நீதிமன்றம் பதினைந்து ஆண்டு சிறை தண்டனை விதித்தது.

சட்ட விரோதமாக ஈட்டிய சொத்தில் ஒரு பாகமும் பறிமுதல் செய்யப்பட்டது. தமது பதவி அதிகாரத்தை, இவர் துஷ்பிரயோகம் செய்தார் என்றும் தெரிகிறது.

தி. மு. கழகத் துவக்க விழா

அசாவீரன் குடிக்காடு தி. மு. கழகத் திறப்பு விழா, 2-10-53 அன்று சிறப்புற நடைபெற்றது. கட்சியின் கொள்கை, இலட்சியம்பற்றி பலர் பேசினர்.

வியன்னாவில் தோழர் கல்யாணசுந்தரம்

சென்னை, அக். 23—

வியன்னாவில் நடைபெற்ற மூன்றாவது உலக தொழிற் சங்க மாநாட்டில் எம். கல்யாணசுந்தரமும் கலந்துகொண்டார்.

பண்டிதமணி கதிரேசன் செட்டியார் மறைவு

சென்னை, அக். 25—

பண்டிதமணி மகிபாலன்பட்டி எம். கதிரேசன் செட்டியார் அவர்கள், அவரது சொந்த ஊரில், தனது 70-வது வயதில் நேற்று மாலை இயற்கை எய்தினார். பண்டிதமணி கதிரேசன் செட்டியார் தமிழ்ப் புலமை பெற்றவர்; அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் அவர் பணியாற்றிய 12 ஆண்டுகளில், அவர் இட்டது தான் சட்டமாக இருந்தது. இறக்கும் காலம் வரை அவர் ஆரியத்தின் அடிவருடியாகவே வாழ்ந்து, ஆரியத்தின் அடிவருடியாகவே இறந்தார்.

திருக்குறள், 'சுக்ர நீதி' யானை வடமொழியிலிருந்து பிறந்தது என்று மயக்குரை கூறியவர் அவரே. மிருச்சகடிகா, அர்த்த சாஸ்திரம் என்ற வடமொழி நூல்களை அவர் தமிழாக்கியிருக்கிறார். பண்டிதமணியின் மறைவு ஆரியக் கலாச்சார விரும்பிகளுக்கு ஈடு செய்யவொண்ணாத பெரு நஷ்டமாகும்.

வருந்துகிறோம்

சென்னை, அக். 26—

சென்னை வண்ணையம்பதி கே. எஸ். பாண்டியன் பகுத்தறிவுப் படிப்பகத்தின் போஷகருள் ஒருவரும், பத்திரிகை நன்கொடையாளருமான தோழர் சி. இராசகோபால் அவர்களின் பெண் குழந்தை 26—10—53 காலை, இயற்கை யெய்திவிட்ட செய்தி கேட்டு வருந்துகிறோம். குழந்தையைப் பிரிந்து வாடும் பெற்றோர்களுக்கும், உறவினர்களுக்கும் படிப்பகத்தின் சார்பாக எங்கள் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறோம் என்று, தோழர் ஆர். பி. கனி அறிவிக்கிறார்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தூத்துக்குடி வாரம்

தி. மு. கழக கிளைக் கழகத் தோழர்களுக்கு

★

1. நவம்பர் முதல் வாரத்தில், (1-ந் தேதி முதல் 8-ந் தேதிக்குள்) ஒரு நாள், "தூத்துக்குடி நாள்" என்று ஒரு கூட்டம் அவசியம் நடத்த வேண்டும்.
2. அந்தக் கூட்டத்தில், தூத்துக்குடி வழக்கை வாபஸ் வாங்கி, அதில் சம்பந்தப்படுத்தப்பட்டுள்ள தூத்துக்குடி தோழர்களை விடுதலை செய்யும்படி, சென்னைப் பிரதம மந்திரியைக் கேட்டுக்கொண்டு, ஒரு தீர்மானம் நிறைவேற்ற வேண்டும்.
3. நிறைவேற்றிய தீர்மானத்தை, "கனம். இராசகோபாலாச்சாரியார், முதல் மந்திரி, அரசாங்க மாளிகை. செயிண்ட் ஜார்ஜ் கோட்டை, சென்னை—9," என்ற முகவரிக்கு உடனடியாகத் தபாலில் அனுப்பி, நகலை, தலைமை நிலையத்துக்கு அனுப்ப வேண்டும்.
4. அன்றைய கூட்டத்திலேயே, தூத்துக்குடி வழக்கை வாபஸ் வாங்கி, தோழர்களை விடுதலை செய்யும்படி சென்னைப் பிரதம மந்திரியை கேட்டுக் கொள்ளும் மகஜர் ஒன்று தயாரித்து, அதில், நூற்றுக்கணக்கான கையெழுத்துக்களை வாங்கி, தனியாகப் பிரதம மந்திரி 'முகவரிக்கு' அனுப்பி, கையெழுத்திட்டவர்களின் எண்ணிக்கையை தலைமை நிலையத்திற்குத் தெரிவிக்க வேண்டும்.

மேலே குறிப்பிட்டபடி, ஒவ்வொரு திராவிட முன்னேற்றக் கழகக் கிளையும் கட்டாயம் செய்யும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

'அறிவகம்,'
சென்னை,
23—10—53.

ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ.
பொறுப்பாளர்,
தி. மு. கழகத் தலைமை நிலையம்

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

வட அயர்லாந்து தேர்தலில் இங்கிலாந்திற்கு அனுகூலம்!

பிரிட்டிஷ் சார்பு கட்சியினர் வெற்றி பெற்றனர்

1921-ல் இருந்து வட அயர்லாந்தின் ஆட்சிப் பொறுப்பில் இருந்துவரும், பிரிட்டிஷ் சார்பு கொண்ட கட்சியினர், அங்கு அண்மையில் நடைபெற்றத் தேர்தலில் வெற்றி பெற்று உள்ளனர்.

தேர்தல் மனு கொடுக்கும் நாளிலேயே ஆளும் கட்சியினரில், பிரதமர் உள்பட 21 நபர்கள் போட்டியின்றி வெற்றிபெற்றுள்ளனர்.

தெற்கு அயர்லாந்துடன் இணைவதா அல்லது எப்பொழுதும் போல் பிரிட்டனுடன் ஒன்றிக் கொண்டு இருப்பதா என்ற பிரச்னையை முன் தள்ளியே இத்தேர்தல் நடைபெற்று இருக்கிறது. இதில் ஆளும் கட்சி பிரிட்டிஷ் தொடர்பை மேற்கொண்டு இருப்பதாகும்.

'ரேஸர் பிளேடு!'

கராச்சி, அக். 26—

ஆண்டொன்றுக்கு 3 கோடி ரேஸர் பிளேடு உற்பத்தி செய்யக்கூடிய தொழிற்சாலை, ஐதராபாத் (சிந்து) அருகில் கூடிய சீக்கிரம் உற்பத்தியை ஆரம்பிக்கும். பாகிஸ்தானுக்கு தேவையான பிளேடுகளை இந்த ஒரு பாக்டரி மட்டும் சப்ளை செய்ய முடியுமாம். நான்கு ஜெர்மன் நிபுணர்கள் ஆலோசனை கூற வந்துள்ளனர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. செழியன், எம். ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, குப்பைய நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.